அதிகாரிகள், அவர்களுடைய துறையிலிருந்து வருகிற ஆடிட்டர்கள் அப்ஜெக்ட் பண்ணுகிறார்கள் என்ற காரணத்திற்காக வழங்க மறுக்கிறார்கள். உள்ளாட்சித் துறை இது குறித்து நடவடிக்கை எடுக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது குறித்து தனிக் கேள்வி உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்கவும்.

B.T. Teacher Educators.

* 16. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:—

(a) whether it is a fact that B.T. Teacher Educators are eligible for a remuneration of Rs. 75 per month; and

(b) if so, the reason for not paying this remuneration to the Teacher Educators, who conducted re-training classes in Mathematics and Science at Madurai during the year 1975?

பி. டி. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பவர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பி.டி. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பவர்கள் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 75 ஊதியம் பெறத் தகுதியுடையவர்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், மதுரையில் 1975 ஆம் ஆண்டில் கணிதம், அறிவியல் பாடங்களில் மறு பயிற்சி வகுப்புகள் நடத்தியவர்களுக்கு இந்த ஊதியம் வழங்கப்படாததற்குக் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆசிரிய போதகர்களுக்கும் தகுந்த ஊதியம் கொடுக்கப்பட்டு விட்டது.

திரு. செ. முத்துசாமி : மாதம் ரூபாய் 75 என்று தரக்கூடிய சிறப்பு ஊதியத்தை உயர்த்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ? உயர்த்தும்படி கேட்டு ஆசிரியர்களிடமிருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதை உயர்த்தும் நோக்கம் எதுவும் அரசுக்கு இல்லை. கோரிக்கை எதுவும் வந்ததாக என்னிடம் விவரமில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பயிற்சி அளிக்கும் பி.டி. ஆசிரியர்களுக்குச் சிறப்பு ஊதியம் வழங்குவது பற்றிச் சொன்னார்கள். அதோடு பி.டி. ஆசிரியர்களுக்கு அறிவியல், கணிதம் போன்ற ஒரு சில குறிப்பிட்ட பாடங்களில்தான் பயிற்சி அளிக்கப்படுகிறது. இன்றையதினம் மற்ற பாடங்களிலும் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. புவியியல் போன்ற பாடங்களை ஆசிரியர்கள் கல்லூரிகளில் படிக்க வாய்ப்பு இல்லை. அனைத்துப் பாடங்களிலும் அவ்வாறு பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்தும் விஷயமாக இது இருப்பதால், அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும்.

திரு. க. அறிவழகன் : பி.டி. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கிற ஆசிரியர்களுக்கு பயிற்சி பெற வருகிறவர்களைவிடக் குறைவாக ஊதியம் வழங்கப் படுகிறது. 75 ரூபாய் குறைவான தொகை என்பதுபற்றி எந்தக் கோரிக்கையும் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் இப்பொழுது சொல்வதையே கோரிக்கையாக ஏற்றுக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதில் எந்தவிதச் சங்கடமும் இல்லை.

திரு. செ. முத்துசாமி : அந்த ஆசிரியர்களுக்கு டி.ஏ. 4 ரூபாய், 5 ரூபாய் என்று தரப்படுகிறது. 6 ரூபாய் டி.ஏ. க்கு அவர்கள் எலிஜிபிள் என்று டி.ஏ. ரூல்ஸ்-ல் கூட இருக்கிறது. அவர்களுக்கு வழங்கும் டி.ஏ. யை 6 ரூபாயாக உயர்த்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைக் கல்வித் துறை பரிசீலிக்கும்.

Government High Schools.

*Q. 17—THIRU V. R. PERIANNAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have sent any circular directing that the Government High Schools, where the Plus Two Course will be started from next Academic year should pay Rs. 25,000; and

(b) if so, the details thereof?